# பொதுக்காலம் 28ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்பிற்குரியவர்களே! பொதுக்காலம் 28ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

நாம் அனைவரும் எல்லா வளங்களும் பெற்று நலமோடு வாழ வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். "நன்றி மறப்பது நன்றன்று", "செய்ந்நன்றி மறந்தாருக்கு உய்வில்லை", "பிறர் உனக்கு தினை அளவு நன்மை செய்தால், அதை பனை அளவாகக் கருதிப் பாராட்ட வேண்டும்" என்று நீதி நூல்கள் கூறுவதை நாம் வாசித்திருக்கிறோம்.

பிறரிடமிருந்து உதவி பெறுபவனின் குறைந்த அளவு கைம்மாறு எது என்றால் நன்றி எனும் வார்த்தை தான். இந்த வார்த்தை செயலோடு இணையும்போது அது புண்ணியமாக மாறுகிறது. இறைவனை நாம் புகழ்வதாலோ நன்றி சொல்வதாலோ அவரின் மாட்சி கூடுவதுமில்லை, குறைவதுமில்லை. மாறாக நமது புகழுரையும் நன்றியுரையும் நாம் மீட்பு பெற உதவுகிறது, என்பது தான் உண்மை.

பெற்ற நன்மைகளுக்கு நன்றி கூறுகின்றவன் மேலும் மேலும் இறைவனிடமிருந்து நன்மைகள் பெற தன்னை தகுதியுடையவன் ஆகின்றான். நம்பிக்கையில் வளர்கின்றான். இறைவனை கண்டு கொண்டு அவருக்கு நன்றி செலுத்தும் பொழுது அவருடைய எல்லையற்ற அன்பும் அருளும் நம்மை மீட்பின் பாதைக்கு அழைத்து செல்லும் என்பதை நன்கு உணர்ந்தவர்களாய் நன்றி உணர்வோடு வாழ்வோம். இத்தியாகப் பலியில் இணைவோம், அருள் பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை: 2 அரசர்கள் 5: 14-17

மருத்துவம் அசுர வளர்ச்சி அடைந்திருந்தாலும் குணமளிப்பவர் கடவுள் ஒருவரே, இஸ்ரயேலின் கடவுளால் மட்டும்தான் தன்னை குணப்படுத்த முடிந்தது என்று அறிந்த நாமான், "இனி மேல் உம் அடியானாகிய நான் ஆண்டவரை தவிர வேறு தெய்வங்களுக்கு எரிபலியோ வேறு பலியோ ஒரு போதும் செலுத்த மாட்டேன்" என உறுதி கொண்டு உண்மை கடவுளுக்கு சான்று பகரும் வாசகங்களைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 திமொத்தேயு 2: 8-13

இறைப்பணி ஆற்ற மன உறுதி வேண்டும். தொடக்க கால திருச்சபையில் மக்களிடம் இருந்த நம்பிக்கையற்ற நிலையை மாற்றி அவர்களை மன உறுதியுடையவர்களாக மாற்றி வழி நடத்த திமொத்தேயுவுக்கு அறிவுரை கூறும் புனித பவுலடியாரின் வார்த்தைகளுக்கு செவி மடுப்போம், நாமும் நம்பிக்கையின் பாதையில் வழி நடப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நலமளிப்பவரே எம் இறைவா!

உம் அருள் ஆற்றலால் இறைப்பணியைத் திறம் பட செய்து வரும் உம் திரு அவை தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் என்றும் உம் பாதையில் பயணித்து திருவருட்சாதனங்கள் வழியாக உம் மக்களை குணப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் வேண்டிய வரங்களை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நாடுகளை ஆள்பவரே எம் இறைவா!

எங்களை ஆளும் நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம். ஜனநாயக முறையில் மக்கள் பணியாற்றவும், பொது நன்மைகளுக்காக ஏற்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் தகுதியானவர்களுக்கு சென்று அடையும் விதமாக அவர்கள் உழைக்கவும் வரம் தர வேண்டுமென்னு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. குணமளிப்பவரே எம் இறைவா!

பல்வேறு விதமான நோய்களினால் மருத்துவமனைகளிலும் இல்லங்களிலும் அவதிப்படும் அனைத்து நோயாளிகளுக்காகவும் மன்றாடுகின்றோம். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய மருத்துவ உதவி, பராமரிப்பு, கவனிப்பு அனைத்தையும் வழங்கி நீரே அவர்களை தொட்டுக் குணப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. இரக்கம் நிறைந்தவரே எம் இறைவா!

ஏழை, எளிய மக்கள், ஆதரவற்றவர்கள், முதியோர்கள் இவர்களை எந்த தயக்கமுமின்றி பராமரிக்கும் அன்பு உள்ளங்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் அனைவரும் நல்ல உடல், உள்ள சுகத்தோடும் பாதுகாப்போடும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. எம் வேண்டுதல்களுக்கு பதிலளிப்பவரே எம் இறைவா!

எங்கள் வாழ்நாட்கள் முழுவதிலும் நாங்கள் பெற்றுக் கொள்ளும் அனைத்து நலன்களும் உம் பேரிரக்கத்தினால் மட்டுமே என்பதை நன்கு உணர்ந்தவர்களாய், என்றும் நன்றி உள்ள மக்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com